**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion
Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhatter -2009
Kumbhakonam, Oppiliappankoil, Tamil Nadu, India.**

# ஸ்ரீவைகானஸத்தில் நித்யார்ச்சனம்

ஸ்ரீவைகானஸபகவத் சாஸ்த்ர வித்வான்,
கடுக்கலூர் எஸ். ஸ்தலசயனபட்டாச்சாரியார், போந்தூர்.

ஸ்ரீவைகாநஸபகவத் சாஸ்த்ரம் வேதமந்த்ரங்களைக் ப்ரதானமாகக்கொண்டது. ஸ்ரீவைகானஸத்தில் வேதமந்த்ரம் இல்லாமல் எதையும் செய்யமுடியாது. ஆதலால் இதை வைதிகம், ஸௌம்யம் என்று கூறுவர். இம்முறைப்படித் தான் க்ராமங்களிலும் நகரங்களிலும் ஸ்ரீமந்நாராயணனை அர்ச்சிக்கும்படி கூறியுள்ளது.

वैष्णवं द्विविधं वैखानसं पाञ्चरात्रमिति। वैखानसं वैदिकं, वैदिकैरर्चितम् ऐहिकाद्मुष्मिकफलप्रदं सौम्यञ्च। सौम्यं सर्वत्र संपूज्यम्।। वैदिकं ग्रामादिषु वास्त्वङ्गाद्मलये मध्ये पश्चिमे ब्राह्मणानां गृहेषु वा अर्चयेत्। (मरीचि विमा. ७७ पटलः)

இவ்விஷயத்தை ஆதாரமாகக் கொண்டு ஸ்ரீவைகானஸத்தில் भक्त्या भगवन्तं श्रीमन्नारायणमर्चयेत् तद्विष्णोः परमं पदं गच्छतीति विज्ञायते என்று விஷ்ணுவை அர்ச்சிப்பதாலேயே மோக்ஷம் ஸித்திக்கிறது என கூறப்பட்டுள்ளது. ஸ்ரீவைகாநஸத்தில் अबोधयदितं शास्त्रं सार्धकोटि प्रमाणतः என்ற ஆதாரத்தின்படி 11/2 கோடி க்ரந்தங்களுடன் கூடிய இந்த ஆகம பகவத் சாஸ்த்ர க்ரந்தம் ப்ருக்வாதி ரிஷிகளுக்கு நைமிசத்தில் ஸ்ரீவிகனஸரால் உபதேசிக்கப்பட்டது.

मूलमस्यापि शास्त्रस्य सार्धकोटि प्रमाणतः। उपादिशत् भगवान् अस्मभ्यं नैमिशे वने।।

इति संक्षेपतः प्रोक्तं महत्वं सूत्रशास्त्रये।। (प्रकीर्णाधिकारः 30, 9394)

இந்த சாஸ்த்ரத்தில் முக்கியமாக தினமும் ஸ்ரீமந்நாராயணனை அர்ச்சிக்கும்படி குறிப்பிடப்பட்டுள்ளது.

तं यज्ञपुरुषं ध्यायन् पुरुषसूक्तेन संस्तूय प्रणामं कुर्याद्यज्ञेषु विहीनं तत्सम्पूर्णं भवतीति श्रुतिः। द्विजातिरतन्द्रितो नित्यं गृहे देवायतने वा भक्त्या भगवन्तं नारायणमर्चयेत्तद्विष्णोः परमं पदं गच्छतीति विज्ञायते।। वैखानसकल्पसूत्र (४,१२,८-१)

अथाग्नौ नित्यहोमान्ते विष्णोर्नित्यार्चा सर्वदेवार्चा भवति। वैखानसकल्पसूत्र (४,१०,१)

तस्माद् गृहे परमं विष्णुं प्रतिष्ठाप्य सायं प्रातर्होमान्तेर्चयति। वैखानसकल्पसूत्र (४,१०,३)

தினமும் ஒரு அர்ச்சகர் காலையில் எழுந்தவுடன் தன்னுடைய நித்யகர்மானுஷ்டானங்களைச் செய்து அதன் பிறகு எம்பெருமானுடைய ஸன்னிதிக்குச் சென்று அர்ச்சா கைங்கர்யங்களைச் செய்யும்படி கூறியுள்ளது. ஸ்ரீவைகானஸத்தில் நித்யம் செய்யும் பகவத் கைங்கர்யத்தினாலேயே இஹபர ஸுகங்கள் எளிமையாக ஸித்திக்கிறது என்று கூறப்பட்டுள்ளது. ஏனெனில் ஸ்ரீவிகனஸர் அர்ச்சை முறையை எடுத்துரைக்கும் போது வேதமந்த்ரங்களை முக்கியமாகக் கொண்டு பண்ணியிருக்கிறார். அர்ச்சகர் தன்னுடைய க்ருஹத்தில் இருந்து ஸன்னிதிக்குச் சென்று ப்ரதக்ஷிணம் செய்வது, சாவியை எடுப்பது, கதவில் சேர்ப்பது, கதவை திறப்பது, ஸ்வாமியை முதன் முதல் ஸேவிப்பது, திருவிளக்கை தூண்டுவது, குடத்தை எடுத்துக் கொண்டு நதிக்குச் செல்வது, தீர்த்தத்தைக் கொண்டுவருவது, ஆலயத்தை சுத்தம் செய்வது, நித்யார்ச்சனத்திற்கு உரிய பாத்ரங்களைச் சுத்தி செய்வது, பஞ்ச பாத்ரத்தை ஸ்தாபனம் செய்வது, அனைத்து உபகரணங்களுக்கும் அந்தந்த தேவதையை ஆவாஹனம் செய்வது, பூ சுத்தி, பூதசுத்தி, ந்யாஸங்கள் தனக்கும்

**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhatter -2009 Kumbhakonam, Oppiliappankoil, Tamil Nadu, India.**

பேரத்திற்கும் செய்வது, அலங்காரம் செய்வது, ஹவிர்நிவேதனம் செய்வது, ப சேர்ப்பது, நமஸ்காரம் செய்து அர்ச்சிப்பது, இரவில் சயனாதிவாசம் செய்து எம்பெருமானை ஸுகாஸனத்தில் எழுந்தருளச்செய்வது என ஸ்ரீமன்நாராயணனை ஒரு ஸாதாரண மனுஷ்யனுக்கு எவ்வாறெல்லாம் பணிவிடைகள் செய்கிறோமோ அதைப் போன்று அனைத்தையும் பண்ணும்படிக் கூறுகிறார். மனிதனுக்குச் செய்யும்போது எவ்வித மந்தரங்களையும் சொல்லாமல் பண்ணுகிறோம். ஆனால் பகவானுக்குப் ஒவ்வொன்றையும் செய்யும் போது அதற்குரிய மந்த்ரத்தைச் சொல்த்தான் பண்ணவேண்டும். இது தான் ஸ்ரீவைகானஸத்தில் ஏற்றம் ஆகும். உதாரணமாகக் கூறவேண்டுமானால் திருமான் மணிக்கதவை திறப்பதற்கு மந்த்ரம் கூறப்படும்போது வைகுண்டத்திலுள்ள ஸ்வர்கமே திறக்கப்படுவதாக வர்ணிக்கப்படும் மந்த்ரம் கூறப்படுகிறது.

दिवं विवृणोतु दिविस्वर्गं पिहितद्वारं विवृणोतु। दिव्यन्तरिक्षे देवताना.ँसाप्सरोगणमभिदर्शयताम्।।

ஸ்ரீவைகானஸத்தில் ப்ரகீர்ணாதிகாரம் என்ற நூல் விஷ்ணுவை அர்ச்சிக்கவேண்டும் என தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

तस्मात् सर्वप्रयत्नेन भक्त्या परमया युतः। समूर्त्ताराधनं कुर्यान्नान्यथा मुक्तिमाप्नुयात्।
अर्चात्मन्येव सर्वेषामधिकारो निरङ्कुशः। विशेषभक्तिहेतुत्वात् प्रतिमाराधनं परम्।।
सुरूपां प्रतिमां विष्णोः प्रसन्न वदनेक्षणात्। कृत्वात्मनः प्रीतिकरीं सुवर्णरजतादिभिः।।

வைகாநஸ கல்பசூத்ரத்தில் ஆறு அங்குளத்திற்கு குறைவு இல்லாமல் விஷ்ணுவின் உருவத்தைச்செய்து அர்ச்சிக்கவேண்டும் என பரிந்துறை செய்கிறார். (षडङ्गुलादहीनं तद्रूपं कल्पयित्वा). இவ்வாறு விஷ்ணுவின் உருவத்தை சில்பசாஸ்த்ரமுறைப்படி வேதத்தில் வர்ணித்தபடி மனதிற்குப் பிடித்தபடி அழகாகச் செய்து ப்ரதிஷ்டை செய்து அர்ச்சிக்கவேண்டும். (सुरूपाप्रतिमाप्रोक्ता शोभनादृष्टिहारिणी। मनोहरा प्रसन्ना च मामकी शिल्पिचोदिता) இந்த உருவத்தை ஸ்ரீவைகாநஸ பகவத் சாஸ்த்ரத்தில் கூறியபடி ப்ரதிஷ்டை செய்வது தான் உயர்ந்தது என்கிறார். எவ்வாறு பாறையினுள் தேரை இருக்கிறதோ, விதையினுள் மரம் இருக்கிறதோ, அரசமரத்தினுள் நெருப்பு/அக்னி இருக்கிறதோ, பால் நெய் இருக்கிறதோ, எள் தான்யத்தில் எண்ணை இருக்கிறதோ, புஷ்பத்தில் வாசனை இருக்கிறதோ, பழத்தில் ரசம் இருக்கிறதோ அவ்வாறே பிம்பத்தில் விஷ்ணு ஆவிர்பவித்து இருக்கிறார். இந்த விஷ்ணுவை தினமும் வேதமந்த்ரங்களாலும், சிறந்த அர்ச்சகர்களாலும் அர்ச்சித்தால் நாம் அர்ச்சிக்கும் பிம்பத்தில் விஷ்ணு எழுந்தருளி நமக்கு வேண்டியதை அனுக்ரஹம் செய்கிறார்.

क्षीरे सर्पिस्तिले तैलं पुष्पे गन्धं फले रसः। काष्टे अग्निरिव सर्वत्र व्यापिनं पुरुषोत्तमम्।।
स्थापकस्य तपो योगात् पूजायाष्यातिशायनात्। आभिरूप्याच्च बिम्बस्य सदासन्निहितो हरिः।।

ஸ்ரீவிஷ்ணுவை ஆறு காலம், மூன்று காலம், இரண்டு காலம் அல்லது ஒரு காலமாவது அர்ச்சிக்க வேண்டும். ஜபஹோமங்கள் அபிவ்ருத்திக்காக காலையிலும், ராஜாக்களும் பாரததேசமும் செழுமையாக இருக்க மதியத்திலும், அனைத்து தான்யங்களும் நிறைய கிடைப்பதற்கு மாலையிலும் ஆண், பெண், குழந்தைகள் வ்ருத்தியடைய விடியற்காலையிலும் அசுரர்கள் அழிவதற்காக பிற்பகலும் (3 மணி முதல் 4.30 மணிவரை), பசுக்கள் நன்குவளர அர்த்தயாமத் திலும் திருவாராதனம் செய்ய வேண்டும்.

**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhatter -2009 Kumbhakonam, Oppiliappankoil, Tamil Nadu, India.**

प्रत्यूषः प्रातः कालश्च मध्याह्नश्चापराह्णकः। सायङ्कालार्धयात्रश्च पूजाकालस्तु षड्विधः।।
षट्कालं वा त्रिकालं वा द्विकालं कालमेव वा। त्रिकालमर्चनायुक्तेत्वेकदाह्यवाहनं चरेत्।।

திருவாராதனத்தில் ஒவ்வொருகாலத்திலும் பகவான் ஒவ்வொருவிதமாக இருந்து கொண்டு நாம் செய்யும் பூஜையை ஸ்வீகரிக்கிறார். காலையில் குழந்தையாகவும் மதியத்தில் சிறுவனாகவும், ஸாயங்காலத்தில் வயதடைந்தவராகவும் இருந்துகொண்டு நாம் செய்யும் பூஜையை ஏற்று அனுக்ரஹத்தை செய்கிறார். இதனடிப்படையில் தான் வடநாட்டிலும், கேரள தேசத்திலும் ஸ்வாமிக்கு ஒவ்வொரு வேளையிலும் அதற்கேற்ப தனித்தனி அலங்காரங்கள் விஷ்ணுவுக்குச் செய்யப்படுகிறது. இவ்வாறு செய்யப்படும் பூஜையில் ஆஸனங்கள் கூறப்பட்டுள்ளது. அவைகள் முறையே மந்த்ராஸனம், ஸ்னானாஸனம், அலங்காராஸனம், போஜ்யாஸனம், யாத்ராஸனம், பர்யங்காஸனம் ஆகும். மந்த்ராஸனத்தில் ஐந்து உபசாரங்களும், ஸ்னானாஸனத்தில் எட்டு உபசாரங்களும் அலங்காராஸனத்தில் பத்து உபசாரங்களும் போஜ்யாஸனத்தில் ஐந்து உபசாரங்களும், யாத்ராஸனத்தில் ஐந்து உபசாரங்களும் செய்து ஸ்வாமியை அர்ச்சிக்க வேண்டும். உபசாரம் என்றால் பணிவிடை (கௌரவம் செய்தல்) என்று பொருள்.

मन्त्रासने- आसनं पाद्यमाचाममर्घ्यं च मुखवाससम्। पञ्चोपचारा देवस्य मन्त्रासनपरिग्रहे।।

மந்த்ராஸனத்தின் போது அர்ச்சகர் கூர்மபீடத்தில் பத்மாஸனத்தில் அமர்ந்து ஆதாரசக்தியை (கூர்மத்தை) த்யானித்து அதன் மேல் ஆயிரம் தலையுடைய ஆதிசேஷனை த்யானித்து எட்டு திக்குகளிலும் எட்டு ஐராவதங்களை த்யானித்து அதன் மேல் ஏழு ஸமுத்ரங்களை த்யானித்து அதன் நடுவில் ஆயிரம் இதழ்களுடைய தாமரைப்பூ இருப்பதாக நினைத்து அதன் நடுவில் சிகப்புடன் கூடிய தாமரை பீடத்தை த்யானித்து அதனுடைய நுனியில் உள்ள பீடத்தில் ஸ்ரீமன்நாராயணன் இருப்பதாக நினைத்துக் கொள்ளவேண்டும். பின்பு குருவிடம் உபதேசம் பெற்றபடி ஸ்ரீவிகனஸரை த்யானித்து பவித்ரத்தை அணிந்து கொணட கையுடன் ப்ராணாயாமம் செய்து யோகசாஸ்த்ர முறைப்படி ரேசக பூரக கும்பக த்யானங்களுடன் சோஷண, தாஹன, ப்லாவனங்களை தன்னுடைய ஆத்மாவிற்குச் செய்து பிறகு பகவானுக்கு ஆவாஹணங்களைச் செய்ய வேண்டும். (यथा देहे तथा बेरे न्यासकर्म समाचरेत्). இங்கு கூறப்பட்டுள்ள விஷயத்தை பார்க்கும்போது விஷ்ணுவின் லோகமான ஆமோதம், ஸம்மோதம், ப்ரமோதம், வைகுண்டம் என்பதில் உயர்ந்த (கடைசீ) இடமான வைகுண்டத்தில் இருக்கும் ஸர்வவ்யாபியான ஸ்ரீமன்நாராயணனை வர்ணிக்கப்பட்டுள்ளது நன்கு தெரிகிறது. மந்த்ரங்களின் மூலம் ந்யாஸங்களைச் செய்து எம்பெருமானுடைய சக்தியை கௌதுக உத்ஸவ ஸ்னபன பபேரங்களில் ஆவாஹனம் செய்து ஆஸனம், பாத்யம், ஆசமனம், அர்க்யம், முகவாசம் ஆகிய ஐந்து உபசாரங்களினால் அர்ச்சிக்கவேண்டும்.

स्नानासने- पादुकं दन्तकाष्ठं च तैलमुद्वर्तनं तथा।
शिरस्यामलकं तोयं कङ्कतं प्लोतमेव च।
अष्टोपचारा देवस्य स्नानासन परिग्रहे।।

ஸ்னானாஸனத்தில் புருஷஸூக்தத்தினால் பகவானை திருமஞ்சனம் செய்யும்படி கூறப்பட்டுள்ளது. புருஷஸூக்தத்தில் கூறும் புருஷன் ஸாக்ஷாத் ஸ்ரீமன்நாராயணனே

**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion**
**Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhatter -2009**
**Kumbhakonam, Oppiliappankoil, Tamil Nadu, India.**

ஆகும். இந்த ஸ்னான ஆஸனத்தில் கௌதுகபேரத்தையும் அவர் முன்பு பாதுகையையும் எழுந்தருளச்செய்து தந்ததாவனம், எண்ணை, நெல்ப்பொடி, தீர்த்தம், தலைசோதனம் செய்வது, ப்லோதம், அர்க்யம் என எட்டு உபசாரங்களால் அர்ச்சிக்கவேண்டும்.

अलङ्कारासने - वस्त्रं यज्ञोपवीतष्टा गन्धालोपनभूषणे। पुष्प दामाञ्चनादर्श धूपो दिपोर्घ्यमेव च।।
दशोपचारान् देवस्य अलङ्कारासने ददेत्।।

அலங்காராஸனத்தில் ஶ்ரீவிஷ்ணு எப்பொழுதும் அலங்காரத்தையே விரும்புவார் என்பதையும், அனைத்து ஆபரணங்களுக்கும் ஆவாஹணத்தைச் செய்து அணிவிக்கவேண்டும் என்பதையும் உணர்த்தப்படுகிறது. அதாவது ஸ்னானம் செய்தவுடன் வஸ்த்ரம், யக்ஞோபவீதம், சந்தனம், ஆபரணம், புஷ்பமாலை, மை, ஆதர்சம், தூபம், தீபம், அர்க்யம் ஆகிய பத்து உபசாரங்களால் அர்ச்சிக்க வேண்டும்.

भोज्यासने - मधुपर्कं हविस्तत्र पानीयं चाग्निपूजनम्। मुखवासं च पञ्चेते भोज्यासनपरिग्रहे।।

போஜ்யாஸனத்தில் ஶ்ரீவிஷ்ணுவுக்கு உகந்த பொருட்களை பக்குவம் செய்து மந்த்ரத்தினால் அபிமந்த்ரணம் செய்தும் ஹவிர்நிவேதனம் செய்யவேண்டும் எனக் கூறியுள்ளது. ஶ்ரீவைகானஸ கல்பசூத்ரத்தில் கூறியபடி (ஆஹாரமூலானி தாதவ: பவந்தி) ஸாத்விகமான ப்ரஸாதங்களை மட்டுமே உட்கொள்ளவேண்டும் என்பதன் பொருட்டு சால்யான்னத்தையும் நிவேதனம் செய்யவேண்டும் என பரிந்துரை செய்கிறார். இதில் மதுவர்க்கம் ஸமர்ப்பித்து ஹவிர்நிவேதனம், பானீயம், ஹோமம். தாம்பூலம் என ஐந்து உபசாரங்களால் அர்ச்சிக்க வேண்டும்.

यात्रासने - स्तुतिर्द्वजष्टा छत्रं च चामरं वाहनं तथा। पञ्चोपचारा देवस्य यात्रासनपरिग्रहे।।

பொதுவாக அமுது செய்வித்த பிறகு ஒரு இடத்திலே அமர்ந்து இருக்கக்கூடாது என்பதன் பொருட்டு யாத்ராஸனம் கூறப்படுகிறது. இதில் பபேர எம்பெருமான் ஸன்னிதியைச் சுற்றி எழுந்தருளச்செய்து அனைத்து திக் தேவதைகளுக்கும் ப ப்ரஸாதம் ஸமர்ப்பிக்கப்படுகிறது. இதையே தற்காலத்தில் மருத்துவர்களும் சாப்பிட்டவுடன் கொஞ்சம் நடக்கவேண்டும் என்று கூறுகின்றனர். இதில் ஸ்தோத்ரம், கொடி, குடை, சாமரம் ஆகிய உபசாரங்களால் அர்ச்சித்து வாஹனத்தில் எழுந்தருளச்செய்து பயை ஸமர்ப்பிக்க வேண்டும்.

पर्यङ्गासने - मृगनाभिष्टा ताम्बूलं गन्धः पुष्पं तथैव च। प्रदक्षिणनमस्कारौ पर्यङ्गासनसङ्ग्रहे।।

பர்யங்காஸனம் இரவில் மட்டும் செய்யப்படும். பர்யங்கம் என்றால் படுக்கை என்று பொருள். அர்த்தயாம பூஜையில் ஸ்வாமிக்கு பால் சாதமும் (அறவனை ப்ரஸாதம்), பாதாம் ஏலம் குங்குமபூவுடன் சேர்ந்த பால், கஸ்தூரி அல்லது வாசனை த்ரவ்யம், தாம்பூலம், சந்தனம், புஷ்பம், ப்ரதக்ஷிணம், நமஸ்காரம் ஆகிய உபசாரத்தைச் செய்து சயனம் செய்யவேண்டும். பிறகு அதனை ப்ரஸாதமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனால் இரவில் நாமும் பால் சாதம், பசுவின் பால் போன்ற பதார்த்தங்களை குறிப்பிட்ட அளவு சாப்பிட்டால் நன்மையுடன், இரத்தசோகை போன்றவை ஏற்படாமல் இருக்கலாம் என்பதையே குறிக்கிறது.

இங்கு கூறப்பட்டுள்ள ஆஸனங்களுக்கு க்ரமமாக ஶ்ரீவைகானஸ பகவத் சாஸ்த்ரத்தில் மந்த்ரங்கள் கூறப்பட்டுள்ளன. அதனை சரிவரக்கூறி அனைத்தையும் விடாமல்

**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion**
**Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhatter -2009**
**Kumbhakonam, Oppiliappankoil, Tamil Nadu, India.**

செய்யவேண்டும். இவ்வாறு இடைவிடாமல் நாம் அர்ச்சையை தினமும் செய்வதால் ஸ்ரீவைகானஸர்களுக்கு மோக்ஷம் ஸித்திக்கிறது என்று விளக்கப்பட்டுள்ளது.

அத்ரிமஹரிஷியின் புராதந்த்ரத்தில் பகவானை ஆலயத்தில் ஐந்து மூர்த்திகளைக் கொண்டு திருவாராதனம் செய்வதால் நூறு அச்வமேதயாகம் செய்த பலன் கிடைக்கிறது என்கிறார். அதாவது இந்த்ரன் எவ்வாறு தேவர்களுக்கு தலைவனாக இருந்துக் கொண்டு வேண்டியதை அடைந்து மகிழ்கிறானோ அவ்வாறு இங்கு கூறியுள்ளபடி பக்தியுடனும் மந்த்ரத்துடனும் ஆசாரத்துடனும் ஸ்வாமிக்கு கைங்கர்யம் செய்வதால் நமக்கு வேண்டியவை அனைத்தும் கிடைக்கிறது என்கிறார்.

आलये पञ्चमूर्त्तीनामर्चनं त्वधिकं भवेत्। शतक्रतूनां यजने तत्फलं च परिकीर्त्तितम्।।

இவ்வாறு சிறப்பாக விளங்கும் ஸ்ரீவைகானஸ பகவத் சாஸ்த்ர முறைப்படி அனைத்து ஆலயங்களிலும் பூஜா விதி முறைகளை மேற்கொள்ளவேண்டும்.

ब्रह्मचारी गृहस्थोपि वानप्रस्थोथभिक्षुकः।
केशवाराधनं हित्वा नैव याति पराङ्गतिम्।।

ஆதலால் நான்கு ஆச்ரமத்தவர்களும் உருவவழிபாட்டை (ஸமூர்த்தார்ச்சனம்),

மேற்கொண்டு இவ்வுலகத்தில் சௌகர்யத்தை அடைய ஸ்ரீமன் நாராயணனைப் ப்ரார்த்திக்கிறேன்.

மங்களானி பவந்து.

****************